**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 360 நாள்: 06.08.2026

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை வடக்கு மற்றும் மத்திய வட்டார துணை ஆணையாளர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, இராயபுரம் மற்றும் கோடம்பாக்கம் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., (வடக்கு), திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்திய) இன்று (06.08.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இராயபுரம் மண்டலத்தில் வார்டு-63க்குட்பட்ட ஜி.பி. சாலை சந்திப்பில் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டி, பாரதி சாலையில் வண்டல் வடிகட்டித் தொட்டி, வார்டு-59க்குட்பட்ட எண்.எஸ்.சி போஸ் சாலை சந்திப்பில் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டி, வார்டு-57க்குட்பட்ட பிரகாசம் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்கள் மற்றும் வண்டல் வடிகட்டித் தொட்டி ஆகியவற்றினை வடக்கு வட்டார துணை ஆணையாளர் பார்வையிட்டு ஆய்வு செய்து, தூர்வாரும் பணிகளை விரைந்து முடித்திடவும் இதர வண்டல் வடிகட்டித் தொட்டி தூர்வாரும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-135க்குட்பட்ட காமராஜர் சாலையில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி, வார்டு-136க்குட்பட்ட பி.டி.ராஜன் சாலையில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி ஆகியவற்றினை மத்திய வட்டார துணை ஆணையாளர் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி.**